# மா. இராசமாணிக்கனார் – பல்லவர் வரலாறு

*முனைவர் கல்பனாசேக்கிழார்*
உதவிப் பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

தமிழக அரசியல், சமூக, பொருளியல், மொழி சார்ந்த வரலாற்றை எழுதுகையில் இன்று புதிய தரவுகளுடன் பல்வேறு முறைமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் தமிழக வரலாற்றை அறியவும், தமிழக வரலாறு குறித்து ஆய்வதற்கும் தவிர்க்க இயலாத நூலாக இருப்பது, 1944 ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழி வெளிவந்த மா. இராசமாணிக்கனாரின் பல்லவர் வரலாறு. இந்நூல் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்டுள்ளது. 1990 இல் ஆர். கோபாலன் அவர்கள் எழுதிய தமிழ்நாட்டு வரலாறு பல்லவர் - பாண்டியர் காலம் என்னும் நூலில் பல்லவர் வரலாறு குறித்துப் விவரிக்கும்பொழுது இருபத்தோறு இடங்களில் மா. இராசமாணிக்கனாரின் நூலை மேற்கோள் காட்டியுள்ளார். ஆகையினால் புதிது புதிதாகப் பல்லவர் கால கல்வெட்டுகள் செப்பேடுகள் கிடைத்தாலும், பல்லவர் வரலாறு எழுதப்பெற்று எழுபது ஆண்டுகள் கடந்தும், அவர் கூறிய முடிவுகளிலிருந்து பெரிதும் மாற்றம் நிகழ்ந்துவிடவில்லை என்றே கூறலாம்.

பல்லவர் வரலாற்றினை எழுதுவதற்கு அவருக்கு முன்னும், சம காலத்திலும் நிகழ்த்தப்பட்ட பல்லவர் பற்றிய ஆய்வுகள் (அறுபது நூல்கள்), இருபத்து மூன்று கல்வெட்டுத் தொகுதிகள், ஆராய்ச்சி இதழ்கள், திங்கள் இதழ்கள், கள ஆய்வு என அத்துணைத் தரவுகளையும் பயன்படுத்தியுள்ளார். எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் மா. இராசமாணிக்கனாரின் ஆய்வு குறித்துக் கூறும்பொழுது, வரலாற்று நூல்களையும் செய்திகளையும் பயன்படுத்திக் கொள்வதில் தனித்தன்மையைக் காட்டியுள்ளார். அறிஞர்கள் மாறுபட்ட கருத்து க்களைக் கொண்டிக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்பாக யார் சொல்வதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் புதிதாக ஆய்ந்து நுணுக்கமாகச் சிந்தித்துப்பார்த்து, தம்முடைய சொந்த முடிவுக்கு வருவது இராசமாணிக்கனாரின் இயல்பு என்பர்.

பல்லவர் அரசியல் வரலாற்றை,

1. பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டவர்கள் முற்காலப் பல்லவர்கள் (கி.பி. 250- 575)
2. சமஸ்கிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டவர்கள் இடைக்காலப் பல்லவர்கள் (கி.பி. 575 - கி.பி.730)
3. கிரந்த தமிழில் பட்டயங்களை வெளியிட்டவர்கள் பிற்காலப் பல்வர்கள் (கி.பி. 731 - கி.பி.890)

என மூன்று பிரிவுகளாக வரலாற்றாய்வாளர்கள் பிரித்து, அதனடிப்படையிலேயே பல்லவர்கள் பற்றிய ஆய்வினை முன்னெடுத்து ள்ளனர்.

இருபத்தாறு இயல்களில் உருவாக்கப் பட்டுள்ள இந்நூல், பல்வேறு தரவுகளின் அடிப்படையில் புதிய வரலாற்று முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. இந்நூல் பல்லவர்கள் வருகைக்கு முன் இருந்த தமிழகம் குறித்த குறிப்புகளுடன் தொடங்குகிறது. தொடர்ச்சியாகப் பல்லவர்கள் குறித்து முதல் கட்ட ஆய்வினை நிகழ்த்திய சர் வால்ட்டர் எலியட், பல்லவர் காலக் கல்வெட்டுகளை ஆராய்தற்கு முன்னோடியாக அமைந்த டாக்டர் பர்னெஸ், மகாபலிபுரத்தை விரிவாக ஆராய்ந்து எழுதிய ஜேம்ஸ் பெர்கூசன், பல்லவர் வரலாற்றை எழுதுவதற்கான முன் வரைவு எழுதிய டாக்டர் ஃப்ளீட், பல்லவர் குறித்து ஆய்வு செய்த ஹீராஸ் பாதிரியார், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, துப்ரெய்ல், பி.டி. சீனிவாச ஐயங்கார், சாரி, டாக்டர் கிருட்டிண சாமி ஐயங்கார், கோபிநாத ராவ், கே.வி. சுப்பிரமணிய ஐயர், அரங்கசாமி சரசுவதி, சி. மீனாட்சி, ஆர் கோபாலன் ஆகியோரைக் குறிப்பிடும் இராசமாணிக்கனார் பல்லவர் வரலாற்றை முதலில் எழுதிய தமிழர் வெங்கையா என அடையாளப்படுத்துகிறார்.

தென்னிந்தியாவில் கி.பி. 250 முதல் கி.பி.850 வரை கிட்டத்தட்ட அறுநூற்று ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்த பல்லவர்கள் யார்? அவர்கள் எம் மரபின் தொடர்ச்சி? என்பவை பற்றியான ஆய்வுகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்த்தப்பட்டன. அவ்ஆய்வுகள் பல்லவர்களைத் தமிழர், தமிழர் அல்லாதவர் என இருவேறுபட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்டன. பல்லவர் என்பதற்குப் பஹ்லவன் என்று பொருள் கொண்டு, பாரசீக மரபினர் பல்லவர் தென்னிந்தியாவுக்குரிய கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட வேங்கி நாட்டவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாகர்களுக்கும் சாதவாகனர்களுக்கும் இடையே நடைபெற்ற போரில் மேற்கு இந்தியாவிலிருந்து தீபகற்ப இந்தியாவின் கிழக்கு கடற்கரைக்கு நகர்ந்தவர்கள் இலங்கையை அடுத்துள்ள மணிப்பல்லவத் தீவிலிருந்து வந்தவர்கள் தொண்டை மண்டலத்துப் பழங்குடிகள் என்னும் நிலைகளில் ஆய்வு முடிவுகள் வெளிவந்தன. இவற்றுள் ஆங்கில வரலாற்றாசிரியர் வின்சென் ஸ்மித் தமது மூன்றாவது பதிப்பில் பல்லவர் தென்னிந்தியரே ஆவர் என்று கூறும் உறுதியான முடிவினை ஏற்றுக்கொண்ட மா. இராசமாணிக்கனார், அம்முடிவற்கு வலுவுட்டும் விதமாகக் கல்வெட்டுச் சான்றுகளையும் இலக்கியத் தரவுகளையும் முன்வைத்து நிறுவுகிறார். ஏனையோர் கருத்துக்களை மறுத்துரைக்கிறார். அண்மையில் கிடைத்த கல்வெட்டுகளின் அடிப்படையில் பல்லவர்கள் ஆந்திரர்கள் என்ற கருத்தே ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது எனக் கல்வெட்டறிஞர் சு. இராஜவேலு கூறும் கருத்தும் அதனை ஒத்துள்ளது. ஆனால், முற்கால இந்தியா என்னும் நூலில் வரலாற்றாய்வாளர் ரொமிலா தாப்பார், தொடக்க கால பல்லவன் அசோக வர்மனின் மூதாதையன் என்று

சொல்லப்பட்டது. அசோக வர்மன் என்பது மௌரிய அரசனாக இருக்கலாம். புத்தமத மரபுகள் அவன் காஞ்சிக்குப் பக்கத்தில் ஒரு தூணைக் கட்டினான் என்று கூறிக்கொண்டன. இவன் இக்காலத்தில் புத்தமத சக்கரவர்த்தி என்னும் கருத்துருவோடு தொடர்பு கொண்டவன். அப்படியே மதிப்பளிக்கப்பட்டவன். பல்வர்களின் மூதாதையர்களோடு அப்படி ஒரு தொடர்பை ஏற்படுத்துவது அப்பகுதியில் இன்னும் நிலவி வந்த புத்தமத மரபிலிருந்து வெளிவந்ததாகக் காட்டிக் கொள்ளும் நோக்கமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இன்னொரு கல்வெட்டில் புத்தர் மகாவிஷ்ணுவின் அவதாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது (பக்.592) என்ற கருத்தினை முன்வைக்கிறார். பல்லவர்கள் புத்த மதத்தோடு தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்பதாலேயே அவர்கள் மௌரியர்களின் மரபு என்பது எப்படி பொருத்தமுடையதாக அமையும்.

தொன்னூலான சங்க இலக்கியத்தில் பல்லவர் குறித்த குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. பல்லவர்களின் தொடக்கக்காலம் ஆந்திரம் என இன்று நிறுவப்பட்டுள்ளது. பல்லவர்களின் தொடக்கக்காலத்துக்குச் சான்றாக உள்ள மூன்று செப்பேடுகளும் குண்டூர் அருகே கிடைத்துள்ளன. பல்லவர்கள் ஆண்ட குண்டூர் பகுதி தெலுங்கு மொழியில் பல்நாடு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. ஆந்திரப் பகுதியில் குறுநில மன்னர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் செயல்பட்டு வந்த பல்லவர்கள் சாதவாகனப் பேரரசு வலுக்குன்றியதும் கிருஷ்ணா ஆற்றிற்குத் தெற்குப் பகுதியை ஆளத்தொடங்கினர். போதிய வலிமை பெற்றதும் தொண்டை நாட்டையும், களப்பிரர்களையும், சிற்றரசர்களாக இருந்த சோழர்களையும் வென்று புதுகோட்டை வரை சென்று தமிழகத்தை ஆளத்தொடங்கினர்.

தமிழகத்து நீண்ட கால ஆட்சி புரிந்த பல்லவர்களின் பெரும்பாலான காலங்கள் குப்தர், கதம்பர், வாகாடகர், சோழர், சாளுக்கியர், ராட்டிரகூடர், கங்கர், கீழைச்சாளுக்கியர், பாண்டியர், சீமாறன், சீவல்லபன் போன்றோருடன் போரிலேயே கழிந்தன. குறிப்பாக இடைக்காலப் பல்லவர் போர்களான இரண்டாம் கந்தவர்மன் மீட்ட கடிகை நெடுமாறன் போர், முதலாம் விக்கிரமாதித்தன் போர், இராஜசிம்மன் காலத்துப் போர் என்பன குறிக்கத் தக்கன. தொடர்ச்சியாகப் போர்கள் நிகழ்ந்தாலும் நரசிம்மவர்மன், ராஜசிம்மன் போன்றோரின் ஆட்சிகாலங்களில் போர்ச் செயல்கள் குறைந்து கலை, மதம், மக்களின் அடிப்படைத் தேவைகள், ஆட்சியில் புதிய முறைமைகள் ஆகியவை சிறப்புற்றன.

தமிழகத்தின் பண்பாட்டு அடையளங்கள் (கற்கோயில்கள்) பக்தி இலக்கிய மரபு, ஓவியக்கலை, இசைக்கலை போன்றவை பல்லவர் காலத்தில் செழுமையுற்று, தனி அடையாளங்களாக உருவாகிறன. இவற்றையெல்லாம் வரலாற்றுப் பேரறிஞர், ஆராய்ச்சி வல்லுநர், சைவ சமய ஆராய்ச்சியாளர் எனப் பன்முக ஆய்வாளுமையுடைய மா. இராசமாணிக்கனார் பிற ஆய்வாளர்களின் கருத்துக்களைத் தொகுத்தும், அவற்றுள் சில இடங்களை மறுத்தும், மறுக்கும் இடத்திற்கு கல்வெட்டுச் சான்றுகளையும் இலக்கியத் தரவுகளையும் முன்வைத்தும் எடுத்துக்காட்டாகச் சலசயனம், தலசயனம் என்பவற்றின் பொருள் தெரியாமல் ஹீராஸ் பாதிரியார் மல்லைத் தலசயனம் என்பது மகாபலிபுரத்தின் பழைபெயர் என்று தமது ஆராய்ச்சி நூலில் தவறாக எழுதிவிட்டார், சலசயனப் பெருமாள் என்பதற்கு நீர் அருகில் பள்ளி கொண்டுள்ள பெருமாள் என்பது பொருளாகும்.

இங்ஙனமே தரையில் பள்ளி கொண்ட பெருமான் கோவில் தலசயனம் எனப்படும். இக்கோயிலைத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். பிற்காலத்தில் விஜயநகர

மன்னரால் புதிப்பிக்கப்பட்டது என விளக்கம் அளிக்கிறார். அதுபோலவே பல்லவர் கால காசுகள் பற்றி எழுதும்போது, எல்லாக் காசுகளும் சிறந்த வேலைப்பாட்டு முறைமை பெற்றவை. டாக்டர் மீனாட்சி என்னும் ஆராய்ச்சித் திறன் பெற்ற அம்மையார், தாம் சென்னைப் பொருட்காட்சிச்சாலை களிற் சோதித்த காசுகளில் பொற்காசுகளாக இருந்த ஆறும், முதலாம் மகேந்திரன் காலத்தவையாக இருக்காலம் என்று கருதுகின்றனர். அக்காசுகளின் மீது கதாசித்ரா என்னும் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை கடாக-(கடாவ) சித்ர (காரப்புலி) என்பவற்றைக் குறிப்பனவாகக் கொண்டு அம்மையார், அவை காடவனாகிய எத்திக்காரப்புலி என்று கூறுதல் பொருத்தமாகவே காணப்படுகிறது. பல்லவர் வரலாற்றில் பண்பட்ட ஆராய்ச்சி உடைய அம்மாயாரின் கூற்று கோடற்பாலதேயாம். எனப் பிறருடைய கருத்தையும் ஏற்றுக்கொள்கிறார். அத்தோடு, பல்லவர் வரலாற்றினை எழுதுவதற்கும் புரிந்துகொள்ளுவதற்கும் பெரியபுராணம், தேவாரம் பற்றிய பயில்வின் தேவையைச் சுட்டிக்காட்டுகிறார்.

பெரியபுராண - தேவாரச் செய்திகள் பல இடங்களில் பல்லவர் வரலாற்றுச் செய்திகளுடன் ஒன்றுபடல் காணத்தக்கது. பெரியபுராணமும், தேவாரப்பதிகங்களும் பல்லவர் வரலாற்றுக் கால இலக்கியச் சான்றாக நின்று எத்துணைப் பேருதவி புரிகின்றன என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும். இதனோடு தாம் நேரில் கண்டவை, தாம் கூறும் கருத்துக்கு ஏற்ப ஒப்புநோக்க கூடிய பகுதிகள் எனப் பல்வேறு விவரணைகளின் களஞ்சியமாக இந்நூல் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த பல்லவர்கள் குறித்த சித்திரத்தை இந்நூல் வழங்குவதால், காலம் கடந்தும் மீள்பதிப்பும், மீள்வாசிப்பும் இதன் மீது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.